பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 21 செவ்வாய்க்கிழமை (05-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 40

# விடுதலை உணர்வையும் போராட்ட வாழ்வையும் ஆழமாகத் தரிசிக்கும் கலைப்படைப்புகள் தேவை

## கலைஞர்களைப் பாராட்டி தலைவர் உரை

யாழ்ப்பாணம், ஜன. 5

"எமது மக்களின் விடுதலை உணர்வையும் போராட்ட வாழ்வையும் ஆழமாக தரிசித்து நிற்கும் அற்புதமான கலைப் படைப்புகளை நாம் உருவாக்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டம் உலகத்திற்கு ஓர் உன்னத வழிகாட்டியாக அமைந்தது போல, எமது கலாசிருஷ்டிகளும் உலகத்தோர் பாராட்டும் உயர் தரத்தை எட்டவேண்டும்."

— இவ்வாறு தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் "தமிழோசை" வீடியோபடத்தை உருவாக்கிய முல்லை மாவட்ட கலைஞர்கள் மத்தியில் பேசும்பொழுது குறிப்பிட்டார்

நவீன தொழில்நுட்ப வசதிகள் ஏதுமற்ற நிலையிலும்— அவலமான போராட்டச் சூழ்நிலையிலும்—மக்களின் போராட்ட வாழ்வை அழகாகச் சித்திரிக்கும் தரமான வீடியோபடத்தை உருவாக்கியமைக்காக, இப்படத்தில் இணைந்து பணியாற்றிய அனைத்துக் கலைஞர்களையும் தலைவர் வெகுவாகப் பாராட்டினார்

"எதிர்பார்த்ததை விடமிகும் தரமாகவும், பார்ப்போரின் உள்ளத்தைத் தொட்டு போராட்ட உணர்வைத் தூண்டிவிடும் வகையிலும் இந்தக் கலைப்படைப்பு அமைந்திருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் படத்தில் பாத்திரம் பங்கேற்ற சகலரும் மிகவும் தத்ரூபமாக, சிறப்பாக நடித்துள்ளனர். முல்லை மண்ணின் இயற்கை அழகும் வளமும், வாழ்நிலையும் இக்கலைப் படைப்பிற்கு மேலும் மெருகூட்டுகிறது. எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தையும், மக்களின் உறுதி குலையாத பங்களிப்பையும் வெளிக்கொண்டு வந்ததில் தமிழோசை வெற்றி கண்டுள்ளது." — இவ்வாறு தலைவர் மேலும் கூறினார்.

வெறும் வர்த்தக நோக்குடன், எதார்த்த வாழ்விற்கு புறம்பாக, மக்கள் மனதில் விரசமான கருத்துகளை விதைத்து வரும் தென்னிந்திய சினிமாவின் தாக்கங்களிலிருந்து விடுபட்டு புதுமையான பரிசோதனைபாக, சமூகப் பொறுப்புணர்வுடன், சினிமா என்ற ஊடகம் இனி முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தலைவர் எடுத்துரைத்தார் முல்லை மாவட்டம் கலைப் பணியில் முன்நின்று எமது பண்பாட்டு வாழ்வு சிதைவுறாது பாதுகாத்து வருவதையிட்டும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

தமிழோசை வீடியோ படத்தின் இயக்குநர் திரு பொ. தாசன், முல்லை மாவட்டக் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. சங்கர், மூத்த உறுப்பினர் திரு. தேவர் ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

இதனையடுத்து தலைவர் தமிழோசை கலைஞர்களுக்த பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இவ்வைபவத்தில் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. பாரதன், மகளிர் அமைப்புப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு மாவட்ட கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. சங்கருக்கு தலைவர் பரிசு வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

# நேற்றும் கிளாலியில் தாக்குதல் சம்பவம்!

## எனினும் சில சடலங்கள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜனவரி 5

நேற்றிரவும் கிளாலிக் கடல் பகுதியில் கடற்படையினரின் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. எனினும் தாக்குதல்களுக்கு மத்தியிலும்—சனியன்று கிளரலிக் கடலில் உயிரிழந்த—பொதுமக்கள் சிலரின் சடலங்கள் கிளாலிக்கு எடுத்து வரப்பட்டன.

நேற்றிரவு படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டு சற்று வேளையில்— இரவு 9 மணியளவில்—கடல் பகுதியில் தொடர்ந்து தாக்குதல் சத்தங்கள் கேட்டன. மோதல்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தாக்குதலுக்கு மத்தியிலும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் சடலங்களில் சில கிளாலிக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதாக இன்று அதிககாலை யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சனியன்று சம்பவத்தில் காயமடைந்த சிலரும் கிளாலிக்கு வந்து சேர்ந்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

எனினும் நேற்றைய தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# கிளாலித்தாக்குதலில் உயிரிழந்த 15 பேர்

யாழ்ப்பாணம், ஜன. 5

சனி இரவு கிளாலிக் கடலில் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட பொது மக்களில் 15 பேரின் விவரங்கள் கிளிநொச்சியில் உள்ள தமிழீழ காவல்துறை பணிமனை மூலமாக வெளியிடப்பட்டுள்ளன.

இத்தாக்குதல் சம்பவத்தில் மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ஆயினும் அது பற்றிய மேலதிக விவரங்கள் நேற்று இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. தாக்குதலில் உயிரிழந்த 15 பேரின் சடலங்களும் கரை ஒதுங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு தற்போது கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாகவும்—

சடலங்களை அடையாளங்

[5 ஆம் பக்கம் பார்க்க]

# பொருளாதாரத் தடையை எதிர்த்து வெகுசனப் போர்!

பொருளாதாரத் தடையை விதித்து கொண்டு மக்களை பட்டினிச் சாவிற்கு இட்டுச் செல்லும் அரசின் செயலைக் கண்டித்து, தமிழீழ மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக மாபெரும் வெகுசனப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

தமிழீழ வெகுசன அமைப்புகளின் ஒன்றியத்தின் ஆதரவில் பிரஸ்தாப வெகுசனப் போராட்டம் மிக விரைவில் நடத்தப்படவிருக்கிறது.

வெகுசனப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளை ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சகல வெகுசன அமைப்புகள், தொழிற் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், அரசாங்க நிறுவனங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறிய வசதி படைத்தோர்— சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்தோர் தமது மீட்பு நிதிக் கடனை செலுத்துவதற்கு வசதியாக 7, 8, 9, 10 ஆம் திகதிகளில் நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் வியாழன்,

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 5

மண்டைதீவு, அராலித்துறைப் பகுதிகளில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் அராலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த களவத்துறை வைரகோவிலடிப் பகுதி நெல்வயல்களில் விழுந்து வெடித்தன. உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ)

## கப்பல் சேவை இல்லாததால் நோயாளியின் மனைவி கிளாலியில் பலியானார்

"குமண" கப்பல் நோயாளர் சேவை நடைபெறாததால், நோயுற்ற தமது கணவரை கிளாலி ஊடாகக் கொழும்புக்கு அழைத்துச் சென்ற மனைவி ஒருவர் படையினர் நடத்திய சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தார். கணவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்

மயிலிட்டியில் இருந்து இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து, கொக்குவிலில்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னோடிப் பரீட்சையின் முடிவுகள் நாளை வரும்

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. சாதாரண தர முன்னோடிப் பரீட்சையின் யாழ். மாவட்டப் பெறுபேறுகள் இன்று சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

நாளை புதன்கிழமை பாடசாலை அதிபர்கள் பரீட்சை முடிவுகளை கோட்டக் கல்வி அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாண்டுக்கான ஜி.சி.ஈ உயர்தர வகுப்புக்கு மாணவர்களை இந்தப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
ஊர்காவற்றுறைப் பிரிவு

## தையற் பயிற்சி

மேற்படி பயிற்சி 12-01-93 ஆரம்பிக்கப்படவுள்ளது. பயில விரும்புவோர் 08-01-93க்கு முன் விண்ணப்பிக்கவும். 10-01-93 முற்பகல் 10-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை எமது காரியாலயத்தில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ஊர்காவற்றுறைப் பிரிவு காரியாலயம்,
59, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர் கௌரவ செயலாளர்
(சி/4094)



## மக்கள் நலன் காக்கும் பிரிவு
## பொது அறிவித்தல்

சுருக்கெழுத்து/தட்டெழுத்து
பயிற்சி வகுப்பு ஆரம்பம்
தமிழ்/ஆங்கிலம்

தகைமை: க.பொ.த. (சா.த. பரீட்சையில் சீத்தி)
தங்களின் பூரண விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
**17-01-1993**

மேலதிக விவரங்களுக்கு இருபாலைச் சந்தியிலுள்ள தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மக்கள் நலன்காக்கும் பிரிவு.
தலைமையகம், இருபாலைச் சந்தி,
கோப்பாய்.
(23925)



## THE JAFFNA EDUCATION CENTRE
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

G. C. E. O/L, A/L
SPOKEN ENGLISH
SHORTHAND - TYPING

இரு மொழிகள் மூலமும் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்:
06 01 1993

(5705) — நிர்வாகி



## கண்ணீர் அஞ்சலி

## சதாசிவம் பாலசுப்பிரமணியம்

எமது சங்கத்தின் மூத்த உறுப்பினரும், தென்மராட்சிக் கிளையின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வந்தவரும், சரஸ்வதி பேக்கரி உரிமையாளருமான

சதாசிவம் பாலசுப்பிரமணியம்

அவர்களின் அகால மரணச்செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். இவரின் மறைவு எமது சங்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், நெறியாளர் குழு,
காரியாலய ஊழியர்கள்.

யாழ் மாவட்ட -
பேக்கரி உரிமையாளர் சங்கம்.
(23918)


# மக்களுக்கு எய்ட்ஸ் பற்றி அறிவூட்டுதல் அவசியம்

### யாழ். றோட்டரிக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 5

"கண்டம் விட்டுக் கண்டம் பாயும் எய்ட்ஸ் நோய் பற்றிய கல்வியை மக்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். எய்ட்ஸ் நோய் வருமுன் காக்கக்கூடிய முறையில் சௌக்கிய வாழ்வு குறித்த கல்வி இன்று அவசியமாகின்றது"

யாழ். றோட்டரிக் கழகம் எய்ட்ஸ் நோய்பற்றி நடத்திய கருத்தரங்கில் உரையாற்றிய வைத்தியை கலாநிதி எஸ். தெய்வேந்திரன் இவ்வாறு கூறினார்.

கடந்த வியாழக்கிழமை சுபாஸ் ஹோட்டலில் நடைபெற்ற இக் கருத்தரங்குக்கு றோட்டரிக் கழகத் தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் தலைமை வகித்தார்

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது;

"1981இல் அமெரிக்காவில் இந் நோய் இனங்காணப்பட்டது ஆனால் ஆய்வுகளின்படி 1950களிலேயே ஆபிரிக்காவில் இந் நோய் இருந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆபிரிக்காவின் பொருளாதாரத்தை விழுங்கி சமூகச் சிக்கல்களை ஏற்படுத்தக் காரணமாக இருந்த இந்நோயால் தாய், தந்தையரை இழந்த மூன்று லட்சம் பிள்ளைகள் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

வருமுன் காக்கும் நடவடிக்கைகள் இல்லாத பட்சத்தில் 21ஆம் நூற்றாண்டு ஆரம்பிக்கும்போது சுமார் 40 கோடி மக்களை இது தாக்குமென்றும் 20 கோடி மக்களை இனங்காணக் கூடியதாக இருக்கும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பீடு செய்துள்ளது.

இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் மருந்து கண்டுபிடிக்க முடியாத நிலையில் இந் நோயை தடுக்கும் நடவடிக்கையாக முரணான பாலியல் தன்னிச்சை சேர்க்கைகள் போன்ற தவறான நடைமுறைகள் தவிர்க்கப்பட வேண்டும்; குருதி மாற்றத்தின் முன்னர் பரிசோதனைகள் மேற்கொள்ளவேண்டும்; உறுப்பு மாற்றச் சிகிச்சைகள் தாய், சேய் உடல்நிலைகள் குறித்த பரிசோதனைகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். பொதுநல அமைப்புக்கள் மக்கள் மத்தியில் இது குறித்த தீவிர பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

திரு. என். இராசேந்திரன், திரு. எஸ். மணிவாசகம் ஆகியோரும் இக் கருத்தரங்கில் உரையாற்றினார்கள். எய்ட்ஸ் நோய் பற்றிய விளக்கப் படங்கள் கருத்தரங்கில் காண்பிக்கப்பட்டன. (க-111)

## சாரதாதேவி பிறந்த தினத்தில் அன்பளிப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 5

ஸ்ரீ சாரதாதேவி ஜயந்தி கடந்த 16 ஆம் திகதி பருத்தித்துறை ஸ்ரீ சாரதாசேவாச்சிரமத்தில் நடைபெற்றது

சேவாச்சிரமத்தின் சமூக நலத் திட்டங்களில் ஒரு பகுதியாக ஜயந்தி தினத்தில் 40 இளம் பெண்களுக்கு பாவாடைகளும், 20 விதவைகளுக்கு சேலைகளும், பார்வையற்ற ஜி. சீ. ஈ. உயர்தர மாணவன் வே. சரவணபவனுக்கு புதிய ஆடைகளும், படுக்கை விரிப்பும், செல்வி ப விஜிதாவுக்கு ஆறாயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் ஒன்றும் வழங்கப்பட்டன.

விவேகானந்த சுவாமிகளின் சேவைத்திட்டம் பற்றிய சேவாச்சிரமத்தின் சிறப்பு நூல் வெளியீடும் அன்று இடம் பெற்றது

இந்நூலின் முதற் பிரதியை சுவாமி சித்ரூபானந்தாவிடமிருந்து டாக்டர் மு. க. முருகானந்தன் பெற்றுக்கொண்டார். (க)

## புத்தாண்டில் புத்தாடை அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் வண. டி. ஜே. அம்பலவாணர் புத்தாண்டு தினத்தன்று 200 இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு புத்தாடைகளை அன்பளிப்பாக வழங்கினார்.

மானிப்பாய், நவாலி ஆகிய பகுதிகளில் தென்னிந்திய திருச்சபையால் கட்டப்பட்ட குடிசைகள் அமைந்துள்ள முகாம்களில் உள்ள குடும்பங்களுக்கு இப் புத்தாடைகள் விநியோகிக்கப்பட்டன.

மானிப்பாய் திருச்சபை வண. பிதா அ. ஜெயகுமாரன் திட்டமிடல் பொறுப்பாளர் சுரேஸ், தம்பு ஆகியோர் இந் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தனர். (க)


## கலை வர்த்தகக்
கல்லூரி
வெலிங்டன் சந்திக்கு
அருகாமை
யாழ்ப்பாணம்

09-01-93 சனிக்கிழமை பாடசாலைகள் நடைபெற இருப்பதனால் அன்றைய வகுப்புக்கள் 08-01-93 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும்.

(சி/2900) நிர்வாகி



## முக்கிய அறிவித்தல்

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட எனது
கணக்கியல் வகுப்பு
07—01—93 இல் இருந்து
எல்லாப் பிரிவுகளுக்கும்
வழமையான
நேர அட்டவணைப்படி
நடைபெறும்.

(சி/2898) ஸ்ரீ


## வாழ்க்கை சுட்டெண்

கடந்த வருடம் டிசம்பர் மாதத்துக்கான வாழ்க்கைச் சுட்டெண் 1358 5 என குடிசன மதிப்புப் புள்ளி விவரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (த)

## தொழுநோய் ஆய்வு

உடுவில், ஜன. 5

மானிப்பாயில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் இம்மாதத்தில் அகதிமுகாம்களில் தொழுநோய் ஆய்வுகளை மேற்கொண்டு சிகிச்சை வழங்க உள்ளனர்.

தொழுநோய் ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள முகாம்களின் பெயரும் திகதியும் வருமாறு;

ஜனவரி 12 – சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை முகாம். ஜனவரி 13 – வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அம்மன் கோவிலடி முகாம். ஜனவரி 18 – கூழாவடி அமெரிக்கமிஷன் தமிழ் பாடசாலை முகாம். ஜனவரி 25 – மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதான அகதி முகாம். (த-152)

# இறந்த தாயின் கருவில் வளர்கிறது ஒரு குழந்தை

மரியொன் பிளொச் என்ற 18 வயதான ஜேர்மன் மாது கடந்த 92 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் திகதி அவர் ஓட்டிச்சென்ற கார் மோதிக் குடைசாய்ந்ததில் படுகாயமுற்று 8ஆம் திகதி மரணமானார்.

ஜேர்மனிய நகரான எர்லாங்கனில் விபத்து நடந்தது நகரப் பல்கலைக்கழகக் கிளினிக்கில் அப் பெண் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் இறந்தபோது டாக்டர்களுக்கு சிக்கல் ஒன்று ஏற்பட்டது.

மரியொன் பிளொச்சின் கருப்பையில் 14 வாரக் கரு ஒன்று வளர்ந்துகொண்டிருந்தது. விபத்தால் கரு எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

ஒரு குழந்தையாகும் வரை இந்தக் கருவைப் பாதுகாப்பதற்காக, இறந்த பிளொச்சின் உடலை மருத்துவரீதியில் பாதுகாப்பாக வைத்திருக்க டாக்டர்கள் இப்பொழுது பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இயந்திரங்களின் உதவியுடன் கருவின் இருதயமும் சுவாசப்பைகளும் இயங்க வைக்கப்படுகின்றன.

இவ்வாண்டு பெப்ரவரி வரை இக் கரு இறந்த தாயாரின் உடலில் இருந்தால் தான் அது முழு வளர்ச்சி பெறமுடியும்.

இதற்கிடையில் இறந்தவர் ஒருவரின் உடலில் குழந்தையை வளர்ப்பதா என்பது ஜேர்மனில் சூடான சர்ச்சையை உருவாக்கியுள்ளது. (க)

(நன்றி: நியூஸ்வீக்)

# மலர்ந்துள்ள புதிய ஆண்டில் மரக்கன்றுகளை நடுவோம்

"காலங்கள் எம்மை விரைவாக கடந்து செல்கின்ற அதேவேளை வெற்றியாண்டாக நம்மைப் பிரிந்து செல்லும் ஆண்டை வழி னுப்பி வைப்பதோடு தேடிவரும் ஆண்டினை பயன்தரு மரங்களை எமது இல்லங்களில் நாட்டி மகிழ்ச்சியோடு வரவேற்போம்."

இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எமது பெற்றோர் நட்ட மரங்கள் இன்றும் அவர்களை நினைவுகூர வைப்பது போலவே நாம் நாட்டுகின்ற மரங்கள்தான் நமது வருங்கால சந்ததி நன்றியோடு நம்மை நினைவு கூர வழி வகுக்கும்.

"மரம் ஒரு சுமையல்ல" அது எங்கள் வளவின் ஏதோ ஒரு மூலையில் நமது குழந்தைகளோடு போட்டி போட்டு வளரட்டும். எனவே மலர்ந்துள்ள புதிய ஆண்டில் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் எதிர்காலச் செல்வங்கள் ஒரு வளமான மண்ணில் வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இன்று

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கிளாலி புனித மிக்கேல் ஆலயத்தில் ஆத்மஜோதி சகோதரர் சீ. அ பிரான்சிஸ் அடிகளுக்கு 12 ஆவது நினைவஞ்சலி பூசை ஒப்புக்கொடுக்கப்படும். பின் அடிகளின் சிலைக்கு கலைஞர் மைக்கல் துரையப்பா பிரான்சிஸ் மாலை அணிவித்து செபிப்பார். (க)

## பிறந்ததின அறக்கொடை வைபவம்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 68 ஆவது பிறந்த தின அறக்கொடை வைபவம் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்ன பூரணி மண்டபத்தில் நடைபெறும் இவ் வைபவத்தில் சிவஸ்ரீ இ சுந்தரேஸ் வரக் குருக்கள், மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரியார் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள், திரு. சு சிவவாகீசர் வரவேற்புரையும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையுரையும், திரு. நாதவநாதன் நன்றியுரையும் நிகழ்த்துவார்கள்

வைபவத்தில் 'வாழும் வழி' என்ற நூலை பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியிட்டு வைப்பார். கவிஞர் திரு. கோ. பத்மநாதன் நயப்புரை நிகழ்த்துவார் காலை 10-30 மணியளவில் அபிஷேகமும் விசேட பூசையும் 12 - 00 மணிக்கு மதியபோசன விருந்துபசாரமும் நடைபெறும்.

## நாளை

யாழ்ப்பாணம், ஜன 5

மருதங்கேணி, தீவகம் உதவி அரச அதிபர்களின் நிர்வாகப் பிரிவுகளைச் சேர்ந்த கிராமசேவையாளர்களுக்கான கூட்டம் நாளை நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகம் அறிவித்துள்ளது

மருதங்கேணி பிரிவுக்குரிய கூட்டம் காலை 10 மணிக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் —

வேலணை, ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பிரிவுக்குரிய கூட்டம் யாழ் செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நண்பகல் 12 மணிக்கும் நடைபெறும். (உ)

★ ★ ★

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதல் உதவிப் பயிற்சி நெறியில் தேர்ச்சி பெற்ற 103 முதல் உதவியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை பிற்பகல் அச்சுவேலி புனித திரேசாமகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-11)


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்
## முக்கிய அறிவித்தல்

1. 08-01-93 வெள்ளி (போயா) வகுப்புக்கள் நடத்தப்படக்கூடாது; சனிக்கிழமை வகுப்புக்கள் வைக்கலாம்—
2. பொதுப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரை 95A L பிரிவு ஆரம்பிக்கக் கூடாது — என அறிவிக்கின்றோம்.

—பொதுச்செயலாளர்.

(23928)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1990 ஜூன் மாதத்தின் பின் இடம் பெயர்ந்து

# முகாம்களில் தங்கியுள்ளோர் எண்ணிக்கை 42 ஆயிரம்!

## உறவினர் வீடுகளில் மேலும் பலர்

வண்ணார்பண்ணை, ஜன. 5

1990 ஜூன் மாதத்தில் மீண்டும் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைகளினால் யாழ். குடாநாட்டில் மட்டும் 9 ஆயிரத்து 656 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 44 பேர் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளனர்.

யாழ். மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்ட மதிப்பீட்டில் இருந்து இப்புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் 188 இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ளனர் என்றும்— இவர்களை விட இடம்பெயர்ந்த மேலும் பலர் தமது உறவினர்கள் வீடுகளிலும், பிற இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர் என்றும்— கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் கட்டுப்பாடடில் இல்லாத 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள முகாம்களில் தங்கி இருப்பவர்களை— இணையத்தில் அங்கம் வகிக்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியம், றெட் பானா, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சர்வோதயம், போரூட், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83, மெதடிஸ்த திருச்சபை, அறவழிப் போராட்டக்குழு போன்ற நிறுவனங்கள் பராமரித்து வருகின்றன.

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவில் மட்டும் ஆயிரத்து 987 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 83 பேர் 14 முகாம்களில் தங்கியுள்ளதாக அறியவந்தது.

(த-162)

## பயிலுநர் ஆசிரியர் நியமனம்;

## செப்டம்பர் மாத சம்பளம் வழங்கப்படவில்லையாம்!

தொண்டர் ஆசிரியர்களாக இருந்து பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம்பெற்றவர்களில் சிலருக்கு கடந்த ஆண்டு செப்டம்டர் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படவில்லையாம்.

செப்டம்பர் முதலாம் திகதி முதல் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருப்பதாக நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் — அவர்கள் எல்லோரையும் போல் உரிய கலத்தில் பதவியேற்றனர் என்றும் - ஆனால் சம்பளம் அக்டோபர் மாதத்தில் இருந்தே வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 5

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் மகளிர் படையணி உருவாக்கிய ''விழித்தெழுவோம்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## வீதி விளக்கு திட்டத்திற்கு இவ்வருடம் ரூ.15 லட்சம் நிதி

### அத்தியாவசிய அமைச்சிடம் கோரிக்கை

யாழ். மாநகரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி விளக்குத் திட்டத்திற்கு இந்த வருடம் 15 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்யுமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் கோரிக்கை விடப்பட உள்ளது.

இன்று நடைபெற உள்ள வடக்கு - கிழக்கு மாகாண அத்தியாவசிய சேவைகள் தொடர்பான மாநாட்டில் யாழ். அரச அதிபர் மேற்படி கோரிக்கையை முன் வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இத்திட்டத்திற்கென செலவிடப்பட்ட இரண்டரை லட்சம் ரூபாவை வழங்கக்கோரும் அறிக்கை ஒன்று ஏற்கனவே அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — முன் நிலாக் காலங்களில் வீதி விளக்குகள் ஏற்றுவதை தவிர்த்துக் கொள்ள உத்தேசித்திருப்பதாகவும் யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

(த-162-17)

## மாகாணசபை தேர்தல்கள் ஜூலையில்

கொழும்பு, ஜன. 5

மாகாணசபைத் தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை மாதம் பிற்பகுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ வட்டாரங்களின் படி, வடமேல் மாகாண, சப்ரகமுகமாகாண சபைகளின் ஐந்தாண்டு காலம் எதிர்வரும் மே 12 ஆம் திகதி முடிவடைகின்றது. தேர்தல்கள் ஜூலை 13க்கும் ஆகஸ்ட் 3ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## சு. கவின் பாத யாத்திரை கைவிடப்பட்டதாம்!

கொழும்பு, ஜன. 5

முன்னாள் பிரதமரும் சுதந்திரக் கட்சி ஸ்தாபகருமான எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் 94ஆவது பிறந்த தினத்தையொட்டி இம் மாதம் எட்டாம் திகதி ஹொரகொல்லையில் இருந்து கொழும்பு நோக்கி நடத்தப்படவிருந்த பாதயாத்திரையை சுதந்திரக்கட்சி கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பாதயாத்திரைக்குப் பதிலாக வெள்ளிக்கிழமை காலி முகத்திடலில் உள்ள அமரர் பண்டாரநாயக்காவின் உருவச் சிலைக்கு முன்பாக ஒரு வைபவமும் ஹொரகொல்லையில் மகாசங்கத்தினருக்குத் தானம் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.

ஹொரகொல்லையில் கட்நத சனி அன்று நடந்த கட்சியின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அந்தக் கூட்டத்தில் அனுரா - சந்திரிகா கோஷ்டியினருக்கு இடையே மோதல் ஏற்பட்டதாகவும் ஒரு கட்டத்தில் அனுராவும் சந்திரிகாவும் ஒருவரை ஒருவர் தாக்கவும் காறி உமிழவும் முயற்சித்தனர் என்றும்— பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்ததனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(த-எ)

## சுதந்திரக் கட்சி இழுபறியில் அனுராவுக்கு வெற்றியா?

கொழும்பு, ஜன. 5

சுதந்திரக்கட்சிக்குள் நடைபெறும் அதிகாரப் போட்டியில் அனுரா பண்டாரநாயக்காவுக்கு பெரிய வெற்றி கிடைத்திருப்பதாக அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி மாலை நடை பெற்ற இரகசியக் கூட்டம் ஒன்றில், சிறிமாவோவின் அதிகாரங்களைக் குறைக்க முனையும் அனுரா கோஷ்டியின் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது

இதனால் மீள முடியாத உட்கட்சி நெருக்கடியில் சிறிமாவோ சிக்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## அறிவித்தல்

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

திருநெல்வேலி.

**பங்குப்பணம் ரூபா 100/-**

06-03-92இல் திருத்தி அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18 (1)க்கு அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/-ஆகும் எனவே, சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக்குழுத் தேர்தலிலோ பொதுச்சபையிலோ, நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே 05-03-93க்கு முன்னர் தங்கள் பணத் தொகையை 100/- ஆக வைத்திருக்க வேண்டும் இதனை தங்கள் கிளைகள் மூலம் செலுத்துமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

இ. இராஜேஸ்வரன், தலைவர். த. பேரம்பலம். செயலாளர்.

(சி/4093)



நாவலர் கல்விக் கழகம்

NAAVALAR KALVI KALAHAM

## நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு ஆரம்பம்: 07-01-1993

(வியாழன் மாலை 3 மணி)

**ஆண்டு 1 முதல் O/L வரை**

சகல பாடங்களும் யாழ். முன்னணி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.

(சி-4092)



## O/L DAY CLASSES

ஆரம்பம்: 05 — 01 — 1993

காலை 8-00 மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-4086)

ஜனவரி 04 முதல்

(23914)


## கண்ணீர் அஞ்சலி

### சதாசிவம் பாலசுப்பிரமணியம்

எங்கள் கிளையின் அங்கத்தவர் ஆகிய திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம் அவர்கள் ( உரிமையாளர், சரஸ்வதி பேக்கரி ) கிளாலியில் இடம்பெற்ற சம்பவத்தில் அகாலமரணமடைந்துள்ளார் என்பதை அறிந்து, மிகுந்த துன்பமும், மனவேதனையும் அடைகின்றோம். இவரது இழப்பினையிட்டு, கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன், அன்னாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளையும் சமர்ப்பிக்கின்றோம்.

யாழ். மாவட்ட பேக்கரி உ. சங்கம்
தென்மராட்சிக் கிளை
அங்கத்தவர்கள்.

[23919]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினுசுகளில் விற்பனைக்கு உண்டு. வர்ணக் கலர்களில் பதிப்பித்தும், படங்கள் தனியாகவும், சிலிப் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தக சாலை, 30, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (23910)

## மணமகள் தேவை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தற்போது யாழ்ப்பாணத்தில் இருக்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர், வயது 31, 12இல் செவ்வாய். பூரம், இந்து, 15-01-93க்கு முன் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல: 477, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (23907)

கவிஸ் நாட்டில் நிரந்தர வதிவிட அனுமதிபெற்று வாழும் இந்துசமய வாலிபர், நடசத்திரம் ரேவதி, பிறந்த திகதி 21-06-1961 மணமகள் தேவை. ஜாதகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்க. பொருத்தம் அமையின் திருமணம் பிறந்தகத்தில் நடைபெறும். இல. 872, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5685)

## மணமக்கள் தேவையா?

மணமகன், மணமகள் தேடவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சந்திப்பு: சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23842)

## திருமண சேவை

அனேக வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் உண்டு. விருப்பத்துக்கு ஏற்ப தெரிந்து எடுக்கலாம். சனி, ஞாயிறு, புதன் 9—2 மணி வரை. ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல: 158, கோவில் வீதி, நல்லூர். (23890)

## சங்கீதம் வினா-விடை

ஆண்டு 10,11இல் சங்கீதம் கற்போருக்கும் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் பயன்தரும் சங்கீதம் வினா-விடை விற்பனையாகின்றது. ஆக்கம்: செல்வி அநேகா. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23903)

## சங்கீதம்

வட இலங்கைச் சங்கீத சபையின் இரண்டாந்தரப் பரீட்சைக்கான பாடத்திட்டத்திற்கு அமைய ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த 'சங்கீதம் வினா-விடை' சகல வகுப்பு மாணவர்க்கும் பயன்தரும். அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (23893)

## சேவை

யாழ். நகரில் 10 வருடங்களாக சேவை செய்த S. C. இம்மனுவேல் அச்சுவேலியில் தமது இல்லத்தில் சேவை செய்கிறார். விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொள்க: 'புஸ்பநிலா', சங்கானை றோட், அச்சுவேலி. (23915)

## வெளிவந்துவிட்டது

புலமைப பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்குப் பயன் தரும் தமிழ் ஆண்டு-5 செயல்நூல் வெளிவந்துவிட்டது. விரிவான விளக்கங்கள் மாதிரி வினாத்தாள்கள் கொண்டது. ஆக்கம்: த. அரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம் (23904)

---

விவசாயிகளே!

அங்லோ ஏசியன் பேர்டிலைசெர்ஸ் கம்பனி வழங்கும்.....

## "பிளாஸ்ட் ஒல்"
## BLAST ALL

நெற் பயிர்களைப் பாதிக்கும் கழுத்து எரிவந்த நோயை திறம்பட கட்டுப்படுத்தவும், மற்றும் புகையிலை, உருளைக் கிழங்கு, தக்காளி மரக்கறி பயிர்களில் ஏற்படும் பங்கசு நோய்களைக் கட்டுப்படுத்தவும்

சிறந்த பங்கசு நாசினி

★ பிளாஸ்ட் ஒல் ★

பீடைநாசினிகள் விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். (சி-2888)

---

## S. L. A. S.
[இலங்கை திருவாக சேவை]

விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கும், அரச ஊழியர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

1993 ஜனவரியில் நடைபெறவிருக்கும்

## போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 06 - 01 - 1993
பிற்பகல் 2 மணி

பாடநெறி: கிரகித்தல், நுண்ணறிவு, விடய ஆய்வு/பொதுவினாத்தாள்

★ விரிவுரைகள் — புதன், வியாழன், சனி,- ஞாயிறு (2 p.m. — 5 p.m.)
★ பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை.
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 350/- (முழுப் பயிற்சிக்கும்)

விவரங்களுக்கு:

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
(சி-2894)

---

விராட் விஸவப் பிரம்மனே நம

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்: 09 — 03 — 1931

சிவபதம்: 27 — 12 — 1982

### அமரர் சிவன் முருகன் ஆச்சாரி
(முருகன் ஆபரண மகால் - சுன்னாகம்)

திதி: 05 - 01 - 1993

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசவிளக்காய் பலரும் மதிக்க வாழ்ந்திட்ட அன்புத் தெய்வமே! ஆண்டுகள் பல சென்றாலும், உங்களது அன்பு முகம் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் அத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

பத்திரகாளி கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (5700)

---

## வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்
## பொதுக் கூட்டம்

அன்புடையீர்!

காலம்: 05 — 02 — 1993 (வெள்ளிக்கிழமை)

இடம்: யாழ். வர்த்தக சங்கப் பணிமனை (21, நவீன சந்தை, மேல்மாடி.)

நேரம்: பிற்பகல் 2-00மணிக்கு நடைபெறும்.

நன்றி.

க. மு. பத்மநாதன்,
உபசெயலாளர்.
(5700)

---

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும்
## "ராக பாவம்"
## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 06 - 02 - 93 — 08 - 02 - 93

திறப்பு விழா: 06 - 02 - 1993
சனிக்கிழமை

★ நிதியுதவி நிகழ்ச்சி ★

முதலாம் நாள்:
07 — 02 — 1993 ஞாயிறு
மாலை 5 தொடக்கம் இரவு 10 வரை

நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன் குழுவினர்
நாட்டியக் கலைமணி எம். அருள்மோகன் (பரதநாட்டியம்)

மெல்லிசை வாணர் ஜி. சாந்தன் குழுவினர்
எழுச்சிப் பாடல்கள்

இரண்டாம் நாள்:
08 — 02 — 1993 திங்கள்
நாதஸ்வர இரட்டையர்கள்
வி. கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர்

இசைக்கச்சேரி
இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் குழுவினர்
இசையமைப்பாளர் கண்ணன்

வழங்கும்

## 'இன்னிசை வார்ப்புகள்'
மெல்லிசை நிகழ்ச்சி

(முன்னணி மெல்லிசைக் கலைஞர்கள் சாந்தன், பௌசி, வர்ணராமேஸ்வரன் பார்வதி - சிவபாதம், மிதிலா விவேகானந்தன், செல்வி ராதிகா சுப்பிரமணியம்)

நுழைவுச் சீட்டு:
நாள் ஒன்றுக்கு: 500/-, 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்
(சி-3919)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 02 — 1933

மறைவு: 05 — 01 — 1992

### அமரர் தண்டாயுதபாணி தயாபரன்
(இளைப்பாறிய பொறியியலாளர்)

"ஓராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவு, எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது"

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, சகோதரன், சகோதரி, மைத்துனர்.

A.G.A. அலுவலக ஒழுங்கை,
சண்டிலிப்பாய். (5701)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கிளாலிப் படுகொலைகள்

கடந்த சனிக்கிழமை இரவு கிளாலிக் கடலில் கடற்படையினர் நடத்திய கொடூரமான தாக்குதலில் 15 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகி உள்ளனர். கடற்படையினர் பயணிகளை நோக்கிச் சுட்டது மட்டுமன்றி படகைக் கைப்பற்றி மக்களை வெட்டியும் சுட்டும் நிட்டூரம் புரிந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா படையினர், தமிழ் மக்களை மனிதர்கள் என்றே கருதாமல், அரக்கத்தனமாக கொன்று குவிப்பதில் வல்லவர்கள் சனிக்கிழமைச் சம்பவம் போன்று பல்லாயிரக்கணக்கான அட்டூழியங்கள் தமிழ் மண்ணில் நடந்துள்ளன. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இவ்வாறான சம்பவங்கள் நாளாந்த நிகழ்வுகளாகி விட்டன.

எனினும், தமிழர்களின் இரத்தத்தைக் குடிக்கவேண்டும் என்ற ஸ்ரீலங்கா படையினரின் வெறி இன்னும் தீரவில்லை என்பதையே சனிக்கிழமைச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

குடாநாட்டு மக்கள் வெளி மாவட்டத்துக்குச் செல்வதற்கு இப்போதுள்ள ஒரேஒரு போக்குவரத்துப் பாதை கிளாலிதான். மற்றும் சில பாதைகளும் மூடப்பட்டுவிட்டன. இந்தப் பாதையும் மூடி தமிழ் மக்களை குடாநாட்டுக்குள்ளேயே முடங்கச் செய்யவேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டையும் ஏனைய பகுதிகளையும் துண்டாடிவிடவேண்டும். அதன் மூலம் யாழ்ப்பாணத்து மக்களின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொல்ல வேண்டும்.

கிளாலியை மூடிவிட்டால் குடாநாட்டு மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை,முற்றுகையை மேலும் இறுக்கி நெரித்துச் சாகடித்து விடலாம் என்பது அரசாங்கத்தின் திட்டம்.

அதனால்தான் ஆயுதப்படைகள் கிளாலிப் பாதையைத் தடை செய்யப்பட்ட பிரதேசம் என்றும் பொதுமக்களை அப்பாதையால் பயணம் செய்ய வேண்டாம் என்றும் கடந்த பல மாதங்களாக எச்சரித்து வருகின்றன.

ஆனால் குடாநாட்டு மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு ஒரேஒரு பாதை கிளாலி என்பது அரசுக்கும் படைகளுக்கும் தெரியும். அவ்வாறிருக்க அதனைப் பயன்படுத்தாமல் எப்படிக் குடாநாட்டு மக்கள் வாழ்வது? அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையை எப்படி நடத்துவது? வெளி மாவட்டங்களில் செய்ய வேண்டிய அலுவல்களை எவ்வாறு கவனிப்பது?

ஆயுதப் படைகள் சொல்கிறார்கள் என்பதற்காக மக்கள் கிளாலிப் பாதையை பாவிக்காமல் முடங்கி இருக்க முடியுமா? ஆனையிறவுப் பாதையால் போகுமாறு கூறினால் இத்தனை அனுபவங்களின் பின்னரும் தமிழ் மக்கள் அதனூடாகச் செல்வதற்குத் துணிவார்களா? அவர்களுடைய பாதுகாப்புக்கு யார் உத்தரவாதம்?

தாம் நினைத்தபடி குடாநாட்டு மக்களை ஆனையிறவு ஊடாகப் பயணம் செய்வதற்கு நிர்ப்பந்திப்பதற்காகவே படையினர் கிளாலிப் பயணிகளைப் இவ்வாறு பழிவாங்குகின்றனர் பலி எடுக்கின்றனர்.

தமிழர்களைத் தனது பிரசை என்று உரிமை கொண்டாடும் ஸ்ரீலங்கா அரசாங்கம், தனது படைகள் மூலம் வழங்கும் உரிமைகளும் பாதுகாப்பும் இந்த லட்சணத்தில்தான் உள்ளன. இந்த அநியாயங்களை எதிர்த்துப் போராடுவதை அவர்களால் சகிக்க முடியவில்லை.

அதாவது தமிழர்கள் சிங்களவர்களின் எண்ணப்படியே வாழ வேண்டும் என்ற அடிமை நிலையை ஸ்திரப்படுத்துவதே அரசின் ஒவ்வொரு நடவடிக்கையின் நோக்கமாகும்.

# பலருக்கு உறையுள் தரும் கிராமமாக மாறியுள்ள முந்திய தென்னந்தோட்டம்

[3]

அந்திசாயும் நேரம்— தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் சற்று நேரம் ஓய்வாக இருந்தோம். குடியிருப்பு மக்கள் தங்கள் அலுவல்களுக்காக அங்கு வந்து போய்க்கொண்டிருக்கின்றனர்.

அப்போது எமக்கு ஓர் எண்ணம் பளிச்சிட்டது அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை அவர்களிடமே நேரில் சென்று கேட்டறிந்தால் என்ன என்று எண்ணினோம்.

கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் குடியிருப்புப் பகுதியில் பட்டுத் தெறித்தபடி இருந்தன அந்தச் சூழல் மிகவும் இதமாக இருந்தது.

அலுவலகத்தில் இருந்து வெளியேறி முற்புறமாக வந்தோம் எமது கால்கள் குடியிருப்புக்கள் உள்ள திசையில் சென்று கொண்டிருந்தன ஓரிடத்தில் சற்று தாமதித்தபடி நின்றோம். குடியிருப்பில் பரபரப்புடன் எங்களது கருமங்களில் ஈடுபட்டிருந்தனர் அந்த மக்கள்.

தாங்கள் நிற்பதை அவதானித்த மூதாட்டி ஒருவர் குடிசையில் இருந்து எட்டிப் பார்த்தபடி 'என்ன விஷயம்' என்று பார்வையால் கேட்டார்.

ஆச்சி எப்படி இருக்கிறீர்கள்?— என்று பேச்சைத் தொடங்கினோம்.

'உள்ளே வாருங்கோ' என்றபடி எம்மை வரவேற்கிறார் அந்த மூதாட்டி. தடுக்குப் பாயை விரிக்கிறார். 'இருங்கோ தம்பிமாரே' என்கிறார் ஆச்சி. நாங்கள் இரு கால்களை மடித்து திருப்தியாக அமர்ந்து கொண்டோம். ஆச்சியின் முகம் மலர்கிறது.

### ஆச்சி சொல்கிறார்

ஆச்சியிடம் சில விஷயங்களை கேட்கிறோம். ஆச்சி சொல்கிறார்.

வைரமுத்து சின்னத்தங்கம் என்பது என் பெயர், வயது 63 ஆகிறது. இராணுவத் தாக்குதல்கள் ஆரம்பமான போது வேலணை செட்டிப் புலத்தில் இருந்து வெளியேறினோம்.

உடைமைகளை எல்லாம் கைவிட்டுவிட்டு உறவினர்களுடன் புறப்பட்டு வெளியேறி வந்துள்ளேன் — என்றார்.

அராலியிலும், நாவாந்துறையிலும் பின்னர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் அமைந்த முகாம்களில் அகதியாக இருந்து பின்னர் தனது விருப்பத்தின் பேரில் இங்கு வந்து குடியேறியதாகச் சொல்லும் அவர் தற்சமயம் தனது பேர்த்தியுடன் அந்தக் குடிசையில் வசிக்கிறார்.

மிகவும் விருப்புடன் தனது பெயர்களைக் கூறி, அலை மேய்ச்சலுக்குச் சென்று திரும்பி வீடு வந்து சேரும் அந்தப் பொன்னான மாலை நேரங்களையும் அவர் நினைவு கூர்ந்து எமக்கும் சொன்னார் அவரது கண்கள் கலங்கிவிட்டன. அவருக்கு அது ஒன்றே கவலையாக இருந்தது

''உங்கள் சொந்த ஊருக்கு திரும்பிச் செல்ல விரும்புகிறீர்களா?'' என்று நாம் கேட்டோம்.

''... எனது பிள்ளைகள் அங்கு சென்று வாழக்கூடிய நிலை எப்போது வருகிறதோ அப்போது நானும் அவர்களுடன் அங்கு செல்வேன். அதுவரை இங்கு இருக்கவே விரும்புகிறேன் — என்றார் அந்த ஆச்சி.

### நிம்மதி தருகிறது

இன்னொரு குடியிருப்பு வாசி சொன்னார். 'முகாம்களில் அலைந்து திரிவதைவிட இங்கு வாழ்வது திருப்தியாக இருக்கிறது''. இவர் புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மா. குசைநாதன் (வயது 44).

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், புங்குடுதீவில் கூடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவர். இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான போது தனது தொழில் உபகரணங்கள் வீடுவாசல் அனைத்தையும் கைவிட்ட நிலையில் யாழ் நகருக்கு வந்தவர்.

இப்போது குடியிருப்பில் உள்ள 31 ஆம் வரிசையில்- தனது குடிசையில் - மனைவி பிள்ளைகளுடன் வாழ்கிறார்.

''வாராந்தம் நிவாரணம் கிடைக்கிறது. கிளாலி இறங்குதுறைப் பகுதியில் எப்போதாவது வேலை கிடைக்கிறது. மற்றபடி சைக்கிளில் விறகு கட்டி உழைக்கிறேன். முகாம்களில் இருந்த சமயம் பட்ட துன்பங்களை விட இங்கு வாழ்வது நிம்மதி தருகிறது-'' என்றார்.

இளம் தாய் ஒருவர் கூறுகிறார்:

இராணுவ நடவடிக்கை ஆரம்பமான பின்னர் யாழ்

**இன்பன்-குமாரன்**

நகரில் பல இடங்களிலும் அகதிகளாக இருந்து இங்கு வந்து சேர்ந்தோம் இங்கு வந்து உறவினர்களுடன் இணைந்து கொண்டது நிம்மதியாக இருக்கிறது. நானும் எனது கணவரும் மூன்று பிள்ளைகளுமாக இந்தக் குடிசையில் சந்தோஷமாக இருக்கிறோம்

இன்னும் பலரிடம் உரையாடினோம். எல்லோரும் ஒரேமாதிரியாகவே சொன்னார்கள். என்றாலும் சொந்த இடங்களை விட்டு வந்தது அவர்களுக்கு வேதனையாகவே இருந்தது. சிலர் பழைய வாழ்க்கையை நினைத்து ஏக்கப் பெருமூச்சு விட்டனர்.

இறுதியாக வழியில் ஒரு வயோதிபரைச் சந்தித்தோம். அவர் தோற்றத்தில் இளைஞரைப்போல் வெகு சுறுசுறுப்பாகக் காணப்பட்டார்.

### அப்பாடா! என்னே மாற்றம்!!

இவர் பண்டிதர் குடியிருப்பு உருத்திரகுமுன்னர்— சுமார் 25 வருடங்களாக— அங்கு வாழ்ந்து வருபவர்.

விடத்தல் பளை – கெற்பேலியில் குடியிருப்பு அமைந்துள்ள சுமார் 200 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தென்னந் தோட்டத்தை முன்னர் பராமரித்து வந்தவர்.

72 வயதான கந்தர் கணபதிப்பிள்ளை என்ற அந்தப் பெரியவர் சொன்னார்:

'கெற்பேலி ஒரு காலத்தில் சனசஞ்சாரமற்ற இடம். இப்போது பார்ப்பதற்கு வியப்பாக இருக்கிறது

''இப்பட்டணம் போல இருக்குது கெற்பேலி. மீன், இறைச்சி முதற் கொண்டு எல்லாம் இங்கேயே கிடைக்குது. கொடிகாமத்துக்குப் போகத் தேவையில்லை'' — என்றார்.

### அந்தக் காலத்தில்.....

அந்தக் காலத்தில் அந்தப் பகுதியில் நடந்த மோசமான திருட்டுச் சம்பவங்கள், வழிப்பறிச் சம்பவங்கள் போன்ற பயங்கரங்களையும் அவர் எம்மிடம் விவரித்தார்

மீண்டும் அலுவலகத்தை அடைந்தோம். அங்கு திரு. சச்சிதானந்தன், திரு.மகிந்தன் ஆகிய இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டோம்.

கதிரவன் மறைந்து கொண்டிருந்த அந்த வேளையில்— கெற்பேலி பண்டிதர் குடியிருப்பையும், அந்த மக்களையும் மறக்க முடியாமல், அன்றைய பொழுதின் நினைவுகளுடன் அங்கிருந்து புறப்பட்டோம்.

(முற்றும்)

# நிர்க்கதியானோர் நிம்மதியாக வாழ உதவும் கெற்பேலிக் குடியிருப்பு

கடந்த காலத்தை விவரித்தார் அந்த ஆச்சி.

''எனது பிள்ளைகள் இதே குடியிருப்பில் தனித்தனிக் குடும்பங்களாக வசிக்கிறார்கள். சொந்த வீடு என்ற உணர்வுடன் இங்கே சுதந்திரமாக உண்ண, உறங்க முடிகிறது. அதுவே போதும்'' என்றார் அவர்

பண்டிதர் குடியிருப்புக்கு வந்த முதற்தொகுதி குடும்பங்களில் ஆச்சி குடும்பத்தினரும் அடங்குவர்.

தனது சொந்த ஊரின் — வாழ்ந்த சூழலின் – நினைவுகளில் இருந்து விடுபட அந்த வதான பெண்ணால் முடியவில்லை என்பது அவர் பேச்சில் தொனித்தது.

ஊரில் தான் மிகவும் அன்புடன் வளர்ந்த ஆடுகளின்

**நேரடி ரிப்போர்ட்**

இவர் ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த ஆரோக்கியம் டெய்ஸிராணி (32 வயது).

### குடியிருப்பில் சிறுகடை

மற்றோர் இளம்பெண் சொன்னார்:

புங்குடுதீவில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். நகரில் அகதி முகாமில் தங்கியிருந்து அங்கிருந்து இங்கு வந்து சேர்ந்தோம். குடியிருப்பில் சிறு கடை ஒன்றையும் நடத்துகிறோம்.

எனது கணவர் யப்பான், சாவகச்சேரி பகுதிகளுக்குச் சென்று சிறு சிறு வியாபாரங்களிலும் ஈடுபட்டு வருகிறார். அதனால் எமக்கு வருமானம் பரவாயில்லை; நிம்மதியாக வாழ்கிறோம் – என்றார்.

## நேரடி ரிப்போர்ட்

### விடுதலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொறுப்பாளர் செல்வி ஜெய ஆகியோரும் பங்குபற்றினர்

தலைவரிடமிருந்து பரிசு பெற்ற கலைஞர்களின் விவரம் வருமாறு:

நடிகைகள்

செல்வி இ. சுரேசினி, திருமதி நி. கமலாம்பிகை, திருமதி ம. தவமணிதேவி, செல்வி கு. இதயராணி, செல்வி அ. சகுந்தலா, செல்வி அ. மாங்கனி, திருமதி சந்திரா, செல்வி மதி, செல்வி. ஜெயந்தி மாலா.

நடிகர்கள்

கி. தவராசா, இ. சந்கிரரூபன், ச. கந்தசாமி, வே. கோபி, ச. ஜேசுதாஸ், ந. சிவபாதம், அ. அழகேஸ்வரன், செ. அறிவழகன், த. திருச்செல்வம், ச. மோகனதாஸ், அருளம்பலம்.

பின்னணி இசைக் கலைஞர்கள்

திரு. ச. மகாலிங்கம், திரு. சி. மனோகரன், திரு. அருணா.

பின்னணிப் பாடகி

திருமதி புவனா இரத்தினசிங்கம்.

படப்பிடிப்பாளர்கள்

செல்வன் சுதா, செல்வன் வ. சந்திரன்.

இயக்குநர்

திரு. பொ. தாசன்.

போராளிக் கலைஞர்கள்

முகுந்தன், அறிவு, தங்கப்பா, அருணன், வாசுராசா, தென்முகன் (சாந்தன்), தன்னலி (கீர்த்தி), சங்கர், சாந்தன்.

கவிஞர்

எஸ். பி. செல்லன் (நடிகரும் உதவி இசையமைப்பாளரும்.)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் ஜன 5

யாழ் வட்டாரலீயோ ஏழகம் நடத்தும் — 11 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதவிருக்கும் கழக அணிகளின் விவரம் வருமாறு:-

★ 3.00 மணி.- சென் நீக்கிலஸ் வி.க அணி எதிர் அரியாலை ஜ. வி.க அணி

★ 4.00 மணி :- சென். றோக்ஸ் வி.க அணி எதிர் பொற்பதி வி.க அணி

(உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 5

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினால் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ குருநகர் பாடும் மீன்''ஏ'' அணி எதிர் உரும்பராய் சென். மைக்கல் ''ஏ'' அணி

(உ)

### மீட்புநிதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளி, சனிக்கிழமைகளில் (7, 8, 9 ஆம்) திகதிகளில் பிற்பகல் 3 மணி முதல் 3.30 மணி வரையும்—

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 10 மணி வரையும் மீட்புநிதி செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## கிளாலித் தாக்குதலில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

காண்பதற்கு உறவினர்கள் அங்கு வரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் குளப்பிட்டியைச் சேர்ந்த இறந்தவரான செ. பரமேஸ்வரியின் கணவரான கந்தையா செல்லத்துரை காயமடைந்த நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த மேலும் பலர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். அங்கு போதிய மருத்துவ வசதி இல்லாததால் அவர்களின் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [உ-5]

### நோயாளியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசித்து வந்த ஒரு குடும்பமே இப் பரிதாப நிலைக்குள்ளானது.

மயிலிட்டியைச் சேர்ந்த கந்தையா செல்லத்துரை (வயது 68) என்பவர் புற்று நோயால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் —

அவரைக் 'குமண' சுப்பல் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் —

கப்பலில் நோயாளர் சேவை நடைபெறாததால் கிளாலி ஊடாக திரு செல்லத்துரையை அவரது மனைவி பரமேஸ்வரி கொழும்புக்கு அழைத்துச் சென்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

கணவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார் என்ற தகவல் இங்கு கிடைத்திருப்பதாக அறிய வந்தது. (அ-3)

## கிளிநொச்சி பாடசாலைகள் இன்று ஆரம்பம்

தென்மராட்சி, ஜன. 5

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று ஐந்தாம் திகதி ஆரம்பமாகும் என மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி சுற்று நிருபம் மூலம் கொத்தணிகளுக்கு அறிவித்துள்ளார் (உ-117)

## அடிக்கடி பறந்த விமானங்கள்

வண்ணார்பண்ணை, ஜன.5

நேற்று குடாநாட்டின் வான் பரப்பில் விமானங்கள் அடிக்கடி பறந்து திரிந்ததைக் காணக் கூடியதாக விருந்தது. காலை முதல் மாலைவரை பல விமானங்கள் பலாலி விமானத்தளத்தில் தரைஇறங்கிச் சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது (உ-111-163)

## ஏழாலையில் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 5

கட்டுவன் இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏழாலை மேற்கில் ஒருவர் காயமடைந்தார்

காயமற்ற கி. பாஸ்கரன் (வயது20) நேற்று அதிகாலை யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு கணபதிப்பிள்ளை

காரைநகர், களபூமி வளுப்போடையைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு கணபதிப்பிள்ளை காலமானார். அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், முருகேசு - காசுபதிப்பிள்ளையின் மகனும், வசந்த குலநாயகி, சரோயினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன் (K. K. K.), தனபாலசுந்தரம் (சென்றல் ஏஜென்ஸி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலசிங்கம் (அரசாங்க ஒப்பந்தகாரர்), காலஞ்சென்ற சுந்தையா (தபால் அதிகாரி), அபிராமிப்பிள்ளை, சபாரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 54, அம்பலவாணர் வீதி, அத்தியடி இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்று, நண்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பாலசிங்கம்

54, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (23929)

### ஆறுமுகம் தர்மராஜா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது நுணாவில் கிழக்கில் வசிப்பவருமான திரு. திருமதி ஆறுமுகம் (செல்லத்துரை) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், முன்னாள் வீரசிங்கம் வித்தியாலய ஆசிரியரும், கிளிநொச்சி கல்வி அதிகாரியுமான தர்மராஜா அகால மரணமானார்.

அன்னார் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியை விஜயலக்ஷ்மி (விஜி)யின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (பரியோவான் கல்லூரி மாணவன்), ரமா. வித்தியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நுணாவில் கிழக்கு கா. செல்லப்பாவின் மருமகனும், தவபாக்கியம், சிதம்பரநாதன் (ஓமான்), வைத்தியகலாநிதி கணேசராஜா (ஓமான்), தங்கராணி, ஜெயபாலன், புஸ்பராணி, வசந்தா ஆகியோரின் அருமைச் சகோதரரும், வைத்திய கலாநிதி விவேகானந்தன் (நியூசிலாந்து), விமலா (நியூசிலாந்து), சந்திரா. இந்திரா (அமெரிக்கா), சாவித்திரி (ஆசிரியை மகளிர் கல்லூரி, சாவகச்சேரி), தில்லைநாதன், வதனி, வாசுகி, யோகேஸ்வரன், ரஜனி, சண்முகராஜா, பவானி, மகாதேவன், பத்மநாதன், சிவபாலசிங்கம் (அமெரிக்கா), வாமதேவன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் 1993-01-05 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
கா. செல்லப்பா
(மாமனார்)

சங்கம் லேன்,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி (23917)

### வல்லிபுரம் நல்லையா

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், தற்போது டச்சு வீதி, கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய வல்லிபுரம் நல்லையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 4-1-93 சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக்கணவரும், லோகநாயகி, சிறிஸ்காந்தராசா (கனடா), தேவரஞ்சிதமலர் (கனடா), பாலசிறீ (U.K) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், சிவபாதசிங்கம் (ஓய்வுபெற்ற மதிப்பீட்டாளர்), பிறேமாவதி (கனடா), பாலகிருஷ்ணன் (கனடா), சிவகாமி (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்ஜீவ், சோபனா, அனோஜனா, துஷாந்தி, துஷியந்தன், சுதன், சரவணா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (5-1-93) செவ்வாய்கிழமை நடைபெற்று பி.ப. 2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவபாதசிங்கம்
(மகள்)

டச்சு வீதி,
கல்வியங்காடு. (23927)

### கார்த்திகேசு பரமதேவன்

கார்த்திகேசு பரமதேவன் (குட்டி) துருக்கியில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற ப. கார்த்திகேசு — செல்வராணி தம்பதிகளின் அன்பு மகனும், விமலாதேவி, கமலாதேவி, சுசீலாதேவி, வாமதேவன், செங்காதேவி, உஷாதேவி, தேவகி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 27-12-92 அன்று துருக்கியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ப. வாமதேவன்

122/10, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி. 23924

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## சார்க் மாநாடு மீண்டும் ஒத்திவைக்கப்படும் நிலை?

டாக்கா. ஜன 5

எதிர்வரும் 13, 14ஆம் திகதிகளில் பங்களாதேஷில் நடைபெறவிருக்கும் ''சார்க்'' உச்சி மாநாடு மீண்டும் ஒத்திவைக்கப்படக் கூடிய சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் 2ஆவது வாரத்தில் நடைபெறவிருந்த சார்க் மாநாடு, இந்தியாவில் அயோத்தியில் பாபரி மசூதி தகர்க்கப்பட்டதை அடுத்து ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

அயோத்திப் பிரச்சினை காரணமாகவே ஜனவரியில் நடைபெறவிருக்கும் மாநாடு மீண்டும் ஒத்திவைக்கப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷைச் சேர்ந்த முஸ்லிம் அடிப்படைத் தீவிரவாதிகள் சிலர் இந்தியாவில் உள்ள அயோத்தியை நோக்கி ஆரம்பித்த யாத்திரை இருநாடுகளுக்கும் இடையில் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதோடு, உத்தேச சார்க் மாநாட்டை கேள்விக்குறியாக்கியும் இருக்கிறது.

இந்த யாத்திரை, இந்தியாவின் உள்நாட்டு அலுவல்களில் அப்பட்டமாகத் தலையிடுவதாகும் என்று இந்தியா நேற்று தெரிவித்தது.

யாத்திரையாக வந்த முஸ்லிம்களை இந்திய எல்லையில் இருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் வைத்து பங்களாதேஷ் பொலீஸார் தடுத்து நிறுத்தினர்.

கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தி அந்த யாத்திரையை மேலும் தொடர விடாது பொலீஸார் தடுத்தனர்.

பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டின்போது மூன்று பேர் உயிரிழந்தனர். எண்ணிக்கை தெரியாதோர் காயமடைந்தனர். அதனைத் தொடர்ந்து யாத்திரை கைவிடப்பட்டது.

பங்களாதேஷ்வாசிகள் எல்லையை ஊடுருவி இந்தியாவினுள் நுழைய அனுமதிக்கும் செயல், இம்மாதம் 13,14 ஆம் திகதிகளில் டாக்காவில் நடைபெறும் சார்க் தலைவர்களின் உச்சி மாநாட்டைப் பாதிக்கும் என இந்தியா, பங்களாதேஷுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றது.

புதுடில்லியில் வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

## யாழ் ஆஸ்பத்திரியில் மாறுப்பட்ட சடலங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சடலங்களில் ஒன்று மாறி எடுத்துச் செல்லப்பட்டுத் தகனக் கிரியைகள் முழுவுற்ற சம்பவம் நேற்று நிகழ்ந்துள்ளது

அரியாலையைச் சேர்ந்த கே. சண்முகலிங்கம் (45 வயது), புத்தூரைச் சேர்ந்த சின்னத்தம்பி கிருஷ்ணகுமார் ஆகிய இருவரின் சடலங்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன

சண்முகலிங்கம் என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்து அங்கு இரண்டாம் திகதி மரணமானவர். கிருஷ்ணகுமாரின் சடலம் நீர்வேலி வில்லுமதவடியில் கண்டெடுக்கப்பட்டு காவல்துறையினரால் அதே தினத்தில் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சண்முகலிங்கத்தின் உறவினர்கள் அவரது சடலம் என்று அடையாளம் காட்டி கிருஷ்ணகுமாரின் சடலத்தை மூன்றாம் திகதி இரவு எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது

கிருஷ்ணகுமாரின் சடலத்தைப் பொறுப்பேற்க அவரது மனைவி நேற்றுப் பிரேதப் பெட்டியுடன் வந்தார். ஆனால் பிரேத அறைக்குச் சென்றதும் அங்கே இருக்கும் சடலம் தமது கணவனுடையது அல்ல என்று அவர் தெரிவித்தார். அப்போது தான் சடலம் மாறி எடுத்துச் செல்லப்பட்டமை தெரியவந்தது.

கிருஷ்ணகுமாரின் மனைவி தமது கணவரின் சடலத்தைப் பெறும் முயற்சியில் அரியாலைக்குச் சென்றிருந்தபோதிலும் அங்கு தகனக்கிரியைகள் முடிந்ததால் ஏமாற்றத்துடன் செல்லவேண்டியதாயிற்று

(அ-15)

### பொருளாதாரத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் உட்பட சகல துறைகளின் பிரதிநிதிகளும் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்கள் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளதாக ஒன்றியச் செயலாளர் திரு. கு. சிறில் தெரிவித்தார். (அ)

### நேற்றும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து விவரமான தகவல்கள் ஏதும் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரைக் கிடைக்கவில்லை.

சனியன்று இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த சுமார் இருபது பேரின் சடலங்கள் இதுவரை ஆலங்கேணிப் பக்கம் கரை ஒதுங்கியிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3-15)

## மரண அறிவித்தல்

### செல்லையா சுப்பிரமணியம்

சரசாலையைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்டசெல்லையா சுப்பிரமணியம் (இளைப்பாறிய பொலிஸ் சாரதி) அகால மரணமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், மணிபத்மன் (ஜேர்மனி), மணிவண்ணன் (ஜேர்மனி), மணிவதனி (89 வர்த்தக பிட மாணவி — சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மணிசேகரன் (93 வர்த்தக பிட மாணவன் — சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மணிதரன் (93 வர்த்தக பிட மாணவன் — சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜா (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்), மகேஸ்வரன் (யாழ்ப்பாணம் எலக்ரிக்கல்ஸ்), கந்தசாமி (மகேஸ் அன்சன்ஸ், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் வேவில் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(23932)

## மரண அறிவித்தல்கள்

### பண்டிதர் விசுவலிங்கம் பொன்னுத்துரை

(இளைப்பாறிய அதிபர், வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரம்பன் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் விசுவலிங்கம் பொன்னுத்துரை B. A. (Ceylon), (India), M. A. (Dauble), English Dip. (London) அவர்கள் [இளைப்பாறிய அதிபர் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம், சமஸ்கிருதப் பண்டிதர்] காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சடாட்சரசோதி [றோகன்], கருணாகரன், றோகினி, வதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லத்துரை [அதிபர்], ஐயாத்துரை [விவசாய ஓவசியர்], கனகரத்தினம் [அதிபர்], நாகரத்தினம் [தபால் அதிபர்] ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சட்டத்தரணி நா. த. சிவஞானம் அவர்களின் மைத்துனருமாவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் திருநெல்வேலி பாடசாலை ஒழுங்கையில் இருக்கும் இல்லத்தில் இன்று செவ்வாய் காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றோகன் (மகன்)

திரு. வி நாகரத்தினம் [Ret. Post Master],
சைவப்பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி (23931)

### ஏகாம்பரம் இரத்தினசபாபதி

(இளைப்பாறிய ஆசிரியர், வெலிமடை தமிழ் மகாவித்தியாலயம், மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்)

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், மானிப்பாயில் வசித்தவருமான ஏகாம்பரம் இரத்தினசபாபதி 4-1-93 திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் கமல தேவி (ஆசிரியர், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம், அவர்களின் அன்புக் கணவரும், திருமதி ஞா. சிறிகாந்தா (ஞானி) [ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி], காலஞ்சென்ற பரிபூரணன் (அமுதன்) [பொறியியலாளர்], இளம்பூரணன் (வரதன்) [பொறியியலாளர், இங்கிலாந்து], ஞானபூரணம் (குகன்) [தோர்வே], சிவபூரணம் (சிவா) [கட்டுப்பெத்த வளாகம்], ஞானகலா (ஞானா) [கொக்குவில் தொழினுட்பக் கல்லூரி], ஞானம்பிகா (அம்பிகா) [கட்டுப்பெத்த வளாகம்] ஆகியோரின் தகப்பனாரும், சிறிகாந்தா [ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி], வனஜா [இங்கிலாந்து] ஆகியோரின் மாமனாரும், சுமித்திரா, நிரோசா, பிரீசன் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் இத்தகவலை யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
க. சிறீகாந்தா

29, மேதர் லேன்,
மானிப்பாய். (23930)

### செல்வி குணரத்தினம் கைலாசநாயகி

[பனை அபிவிருத்தி சபை, ஆசிரியை]

மண்டைதீவு — 5

செல்வி குணரத்தினம் கைலாசநாயகி 29-12-92 கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற குணரத்தினம்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், நடேஸ்வரி, நடேசலிங்கம், செட்டித்துரை மற்றும் இரத்தினலிங்கம், காந்தமலர் ஆகியோரின் சகோதரியும், குகனேஸ்வரி, சாந்தி, பரமேஸ்வரன் (யாழ். பல்கலைக் கழகம்), வசந்தி, சாயீஸ்வரன் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30-12-92 இல் கொழும்பில் நடைபெற்றன.

இன்று (05-01-93) தேவாலய வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
நா. சிவசுப்பிரமணியம்
(மாமனார்)

இல. 11, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம். (23923)

### மாணிக்கம் பொன்னையா (சாமியார்)

(இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் - P.W.D.)

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த மாணிக்கம் பொன்னையா சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் மாணிக்கம் - தையல்நாயகியின் அன்பு மகனும், காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், பரம்ஜோதி, மோகனதாஸ், மனோகரன், வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேம்குமார், சுகந்தி. கருணாகரன், இரத்தினராஜா, மகேந்திரதாசன், நிர்மலாதேவி, இரவீந்திரதாசன், கஜேந்திரன், சுசிலாதேவி, அஞ்சனாதேவி, ரதிதேவி, ரமிலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும். சதீஸ்வரன், சுனந்தா ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், இராஜலட்சுமி, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (5-1-1993) செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. மோகனதாஸ்
(மகன்)

இல. 44/2, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். [23916]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org